பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு


சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 07 திங்கட்கிழமை 21.03.2022 கதிர் 04

## சீனாவிடமும் கடன் கேட்டது இலங்கை

தற்போதைய நெருக்கடியில் இருந்து மீண்டெழ சீனாவிடம் இருந்து 150 கோடி அமெரிக்க டொலர் நிதி உதவியை இலங்கை கோரி யுள்ளது என இலங்கைக்கான சீனத்தூதுவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# பொருளாதார நெருக்கடிக்கான தீர்வும் அதிகாரப் பகிர்வில்தான் தங்கியுள்ளது



### ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் கடிதத்தில் விளக்கம் சர்வகட்சிக் கூட்டத்தையும் பகிஷ்கரிக்க அவர் முடிவு

கொழும்பில் நாளைமறுதினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டியுள்ள அனைத்துக் கட்சி கூட்டத்தில் தாம் பங்குபற்ற மாட்டார் என்பதை ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் முன்னாள் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் எம்.பி., பொருளாதார நெருக்கடிக்கான தீர்வும் அதிகாரப் பகிர்வில்தான் தங்கியுள்ளது என்பதை ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தை ஒட்டி அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக்கூட்டத்தில்என்னால்கலந்துகொள்ளமுடியாவிட்டாலும், தற்போதைய பொருளாதாரச் சூழல் தொடர்பில் எனது கருத்துக்களை எழுதுமாறு தொலைபேசி மூலம் உங்களின் பணியாளர் என்னை வலியுறுத்தினார்.

எனவே எனது கருத்துக்களை மிக சுருக்கமாக கீழே தருகிறேன் -

இன்று நாடு எதிர்நோக்கும் இனப்பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் ஒன்றோடொன்று பின்னிப் ☞2

# மஹிந்த, கோட்டாவால் தமிழர் மனதை வெல்லவே முடியாது!

### இருவரையும் மக்கள் விரட்டியடிப்பர் என்கிறார் பொன்சேகா



**தமிழ் மக்களின் மனதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலும் ஒரு போதும் வெல்லவே முடியாது. எனவே, தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கு அவர்கள் இருவரும் சென்றால் அங்குள்ள மக்களால் விரட்டியடிக்கப்படுவார்கள்.**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.** ☞2

## நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பு கட்டாயம் அவசியம்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குச் சர்வதேசத்தின் ஒத்துழைப்பைக் கட்டாயம் பெற வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டு மக்கள் தற்போது கடும் நெருக்கடியில் உள்ளனர். அரசு மீது கடும் எதிர்ப்பை ☞2

## கோட்டா தலைமையில் நாளை விசேட கூட்டம்!

gOºïâEIªòÃzÃ ïâ¦VB ¶çw©A

ஆளுங்கட்சியின் விசேட கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினை, எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரப் பிரச்சினைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது. ☞2

## வன்முறைக் களமாகும் எரிபொருள் வரிசை; நேற்றும் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை

இலங்கையில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவுக்கு வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் ஒரு புறத்தில் உயிரிழப்பு சம்பவங்கள் இடம்பெறுவதுடன், மறுபுறத்தில் மோதல் சம்பவங்களும் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இதனால் வரிசை என்பது வன்முறை களமாக மாறிவிடும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் மக்கள் கடும் விரக்தியுடன் ☞2

## பிம்ஸ்டெக் அரச தலைவர்கள் மாநாடு; தாய்லாந்து பிரதமர் இலங்கை வருகை

தாய்லாந்து பிரதமர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இலங்கை, இந்தியா, தாய்லாந்து உட்பட 7 நாடுகள் அங்கம் வகிக்கும் பிம்ஸ்டெக் ☞2

# கோட்டாபயவின் சர்வகட்சி மாநாடு; பிரதான எதிரணியும் புறக்கணிப்பு!

### சஜித் தலைமையிலான கூட்டத்தில் அதிரடி முடிவு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளைமறுதினம் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கின்றது.

இந்தத் தகவலை கட்சியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதா அல்லது அதைப் புறக்கணிப்பதா என்பது தொடர்பான ஐக்கிய ☞2



## நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியிடவும் ஆரம்பித்துள்ளனர். இந்த

## வன்முறைக் களமாகும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணப்படுவதால் எவராவது வரிசையை மீறினால் அல்லது வேறு நபர்களுக்கு இடமளிக்க முற்பட்டால் அங்கு மோதல் நிலை உருவாவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு இடம்பெற்ற மோதலொன்று கொலையில் முடிந்துள்ளது.

நிட்டம்புவ, ஹொரகொல்ல பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் நேற்றிரவு ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - 14 ஐச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்புவதற்கு வரிசையில் காத்திருந்த ஓட்டோ சாரதி ஒருவருக்கும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர் அது மோதலாக மாறியுள்ளது.

இதையடுத்து சைக்கிள் ஓட்டுநரை, ஓட்டோ சாரதி கத்தியால் குத்தியுள்ளார். இதனால் படுகாயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் பின்னர் ஓட்டோ சாரதி - அங்கிருந்து தப்பித்துத் தலைமறைவாகியுள்ளார். இதையடுத்து அவரை கைதுசெய்வதற்கான தேடுதல் வேட்டை ஆரம்பமானது. இந்நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, எரிபொருள் வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்த இரு வயோதிபர்கள் மயங்கி விழுந்து பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிம்ஸ்டெக் அரச .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் தாய்லாந்து பிரதமர், கொழும்பு வந்து, அடுத்த தலைமைப் பதவியை ஏற்பார். ஏனைய தலைவர்கள் 'ஒன்லைன்' மூலம் மாநாட்டில் பங்கேற்பார்கள்.

அத்துடன், பிம்ஸ்டெக் அமைப்பில் உள்ள நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்பு மார்ச் 29ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்றும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

## கோட்டாபயவின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் சக்தியின் தீர்மானத்தை எடுப்பதற்காகக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் இன்று முற்பகல் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது பெரும்பான்மையான உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பது என ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

கோட்டாபயவின் சர்வகட்சி மாநாடு வெறும் ஊடகக் கண்காட்சி. பிரச்சினைகளைத் தீர்க்கும் உண்மையான நோக்கம் அரசிடம் இல்லை. நாம் ஏன் மாநாட்டைப் புறக்கணித்தோம் என்பது குறித்த விரிவான ஓர் அறிக்கையை விரைவில் வெளியிடவுள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேலும் கூறினார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என ஜே.வி.பியினரும் மற்றும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் கட்சிகளும் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிலைமை நீடித்தால் மக்கள் போராட்டத்தில் இறங்குவார்கள். எனவே, இப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

எனது ஆட்சியில் இப்படி நடக்கவில்லை. மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். வீதி அமைக்கும் பணிகளை இந்த அரசு உடன் நிறுத்த வேண்டும். அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் - என்றார்.

## கோட்டா தலைமையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர்கள், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் எனப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ள நிலையிலேயே, ஆளுங்கட்சியினரை ஜனாதிபதி சந்திக்கின்றார்.

## மஹிந்த, கோட்டாவால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சில இடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே சரத் பொன்சேகா எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போதே மஹிந்த ராஜபக்ஷவை யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வெறுத்துவிட்டார்கள். அந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கில் எனக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. அதற்காக வடக்கு மக்களுக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் மனதை வெல்ல வேண்டும் என்பதற்காகவே அங்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விஜயம் செய்தார். எனினும், பிரதமரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குள்ள மக்கள் வீதிகளில் போராடி அவரை விரட்டியடித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் மனதையோ அல்லது வடக்கு, கிழக்கு மக்களின் மனதையோ அல்லது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனதையோ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலும் ஒருபோதும் வெல்லவே முடியாது. எனவே, தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கு மஹிந்தவோ அல்லது கோட்டாபயவோ சென்றால் அவர்கள் அங்குள்ள மக்களால் விரட்டியடிக்கப்படுவார்கள் - என்றார்.

## பொருளாதார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிணைந்துள்ளன என்பது சற்றே அசாத்தியமான விடயம்தான்.

நாட்டை தன் சக்திக்கு மீறி செலவு செய்ய வைத்துள்ளது இந்தப் போர். பின் விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் கடன் வாங்கப்பட்டது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும் தீர்வு காண்பதற்கான ஒரே சாத்தியமான வழி, கூட்டாட்சி அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவதுதான் என்பது எனது புரிதல்.

அவ்வாறு செய்வது தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு வழி வகுக்கும் என்பது மட்டுமன்றி, இலங்கையை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு ஒரு வளமான மற்றும் அமைதியான நாடாக மாற்றுவதற்கும் வழி வகுக்கும்.

நீங்கள் சிந்திக்கும் அரசமைப்பு மாற்றத்தின் ஊடாக உண்மையான அதிகாரப்பகிர்வைத் தைரியமாக நிறைவேற்ற முடிந்தால் சர்வதேச சமூகத்தின் பூரண பொருளாதார ஆதரவையும் புலம்பெயர் தமிழர்களின் முழு மனதுடன் ஆதரவையும் பெற முடியும். அவ்வாறு செய்வதன் மூலம், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மிகக் குறுகிய காலத்திற்குள் மீண்டும் தெற்காசியாவின் சொர்க்கமாக மாறும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பில் நாம் அனைவரும் முன்னர் தெரிவித்த கருத்துக்கள் எமது மனங்களில் இருந்து துடைக்கப்படட்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வந்து இந்த நாட்டை தெற்காசியாவில் மட்டுமன்றி முழு உலகிலும் ஒரு சிறந்த, வளமான, ஒன்றுபட்ட நாடாக மாற்றுவோம். இது வெறும் கனவு அல்ல அது நிஜத்தில் நடக்கலாம். நீங்கள் துணிச்சலுடன் செயற்பட்டு இந்த நாட்டில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கானுளவீர்களாயின் இலங்கை வரலாற்றில் உங்கள் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

ஜனாதிபதியே! உங்களுக்கு இப்போது கிடைத்திருக்கும் இந்தப் பொன்னான வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A
யாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பயனற்ற சர்வகட்சிக் கூட்டம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் நாட்டை மீட்பதற்கு வழிவகை தெரியாமல் தடுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு அந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு நாளை மறுதினம் கூட்டி இருக்கும் சர்வ கட்சி கூட்டம் பிசுபிசுத்து போகும் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

இந்த நெருக்கடியை எதிர்கொள்வதில் ஜனாதிபதி கோட்டாபயவும் அவரது அரசும் பல பக்கங்களினாலும் கைவிடப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக தனித்து வருகின்றமை அம்பலமாகின்றது.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பியும் ஏற்கனவே இந்தக் கூட்டத்தை பகிஷ்கரிக்கின்றன என அறிவித்துவிட்டன. நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு எம்.பியை வைத்திருக்கும் ஐ.தே. கட்சி கூட்டத்திற்குப் போகக் கூடும்.

தமிழர் தரப்பிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி போன்றவை பகிஷ்கரிக்கும் முடிவை அறிவித்து விட்டன. இன்றிரவு கூடும் ரெலோவின் அரசியல் குழுவும் அத்தகைய முடிவைத்தான் பெரும்பாலும் எடுக்கும்.

தமிழரசும், புளொட்டும்தான் அந்த கூட்டத்தில் பங்குபெற்ற கூடும்.

ஆளும் கூட்டணியின் பங்காளித் தரப்புக்களில் ஓரணியாக செயல்படும் 11 கட்சிகளில் விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில, வாசுதேவநாணயக்கார போன்றவர்களின் கட்சிகள் இக்கூட்டத்தில் பங்கு பெற்ற போவதில்லை என்பது உறுதி. ஆக, வண. அத்துரலிய தேரரையும், திஸ்ஸ விதாரணவையும் தங்கள் பிரதிநிதிகளாக அத்தரப்புகள் அனுப்புகின்றன. அவர்களும் கூட இவ்விடயத்தில் – பொருளாதார நெருக்கடி விவகாரத்தில் – ஜனாதிபதியையும் அவரது அரசையும் போட்டுப் பிடிக்கும் எண்ணத்தில்தான் உள்ளனர்.

அந்தப் பங்காளிகள் கூட்டில் உள்ள சு.க. இந்தக் கூட்டத்தில் நிச்சயம் கலந்து கொண்டுதானாக வேண்டும். பகிஷ்கரிக்க முடியாது. ஏனெனில் இப்படி ஒரு சர்வ கட்சி கூட்டத்தை அழைத்து, பொருளாதார விடயம் குறித்து ஆராயும் படி ஜனாதிபதியை கேட்டதே அந்தக் கட்சிதான். கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதிக்கும் சு.கவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் சு.க. விடுத்த கோரிக்கைக்கு அமையவே இப்படியான சர்வகட்சிக் கூட்டத்தை ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

நாட்டின் மக்கள் பிரதிநிதித்துவத்தில் கணிசமான பங்காளிகள் பங்கு பெற்றாத இந்தச் சந்திப்பு அதனால் சர்வ கட்சிக் கூட்டம் என்ற அந்தஸ்தை இழந்திருக்கின்றது.

நாடு எதிர் கொண்டிருக்கும் பொருளாதாரப் பின்னடைவுகள், பாதிப்புகள் தனித்து இந்த அரசினால் மட்டும் எதிர்கொண்டு மீளக் கூடிய விடயமேயல்ல என்பது துலாம்பரமானது.

இப்படி ஒரு மீள முடியாத நெருக்கடி விரைவில் வரும் என்பது தெரிந்திருந்தும், அது பற்றி அலட்டிக் கொள்ளாமல், தங்கள் ஆட்சி அதிகாரக் காலத்தை மிதப்போடு அனுபவித்து கழித்து விட்ட முன்னைய அரசுகள் போல, இந்த அரசும் விரும்பினால் இதே நெருக்கடி நிலைமையுடன் – அல்லது அதைவிட மிக மிக மோசமான நெருக்கடிகளுக்குள் நாட்டை மூழ்கடித்தபடி – தனது அடுத்த இரண்டரை ஆண்டு கால ஆட்சியை முடித்துவிட்டு போகலாம். அப்படி இல்லாமல் இப்பிரச்சினைகளில் இருந்து மீளும் ஒரு மார்க்கத்தை நாடு எட்ட வேண்டுமானால், அதற்கான முயற்சி நாடளாவிய ரீதியில் ஐக்கியப்பட்டு – ஒன்றுபட்டு – எடுக்கப்பட வேண்டும். அதனை முன்னெடுக்கக் கூடிய தகுதியும் இயலுமையும் கோட்டாபய ராஜபக்ஷ என்ற எதேச்சதிகார ஜனாதிபதியிடம் இல்லை என்பது தான் நமது துரதிர்ஷ்டம்.

# நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல தன்னால் முடியும் என்கின்றார் சஜித்!



அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயற்பாடுகளால் மக்கள் வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

துணிச்சலான தலைமைத்துவத்தின் கீழ் மட்டுமே நாட்டை உயர்த்த முடியும் என்றும் அவ்வாறான தொரு தலைமைத்துவத்தை வழங்குவதற்குத் தான் தயார் எனவும் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள நிலைமையை சமாளிப்பதற்கான பயணம் கடினமானது என்றாலும் அதனைச் செய்ய முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் கோடீஸ்வரர்களுக்கு 600 கோடிக்கும் 80 கோடிக்கும் இடையில் வரிச்சலுகைகளை வழங்கியதாகக் குற்றம் சாட்டினார்.

இந்த அறிவிப்பு காரணமாக பெருமளவிலான வரிவருமானத்தை இழந்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரச செலவினம் அரச வருமானத்தை விட அதிகமாக இருப்பதால், உலகளாவிய நிதிதர நிர்ணய நிறுவனங்கள் இலங்கையின் தரத்தை குறைத்துள்ளன எனக் கூறினார்.

திறமையற்ற பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக நாட்டின் செலவுகள் வருமானத்தை விட அதிகமாக இருக்கின்றமையை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# எரிபொருள், எரிவாயுவுக்காக இன்றும் வரிசையில் மக்கள்!



எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படாதமையால், அனைத்து பகுதிகளிலும் மக்கள் தொடர்ந்து வரிசையில் இன்றும் காத்திருக்கின்றனர்.

அதேநேரம், பீப்பாய்கள் மற்றும் கான்களில் எரிபொருள் வழங்குவதை கட்டுப்படுத்துமாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேவையற்ற இருப்புக்களை குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இன்றும் பல இடங்களில் சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காகவும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

நேற்றையதினம் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்றி உள்நாட்டு லாப்ஸ் எரிவாயுயின் விலையை அந்நிறுவனம் அதிகரித்தது.

12.5 கிலோகிராம் எடை கொண்ட உள்நாட்டு லாப்ஸ் எரிவாயுவின் விலை 4 ஆயிரத்து 199 ரூபாவாகவும் 5 கிலோ சிலிண்டரின் விலை 1,680 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டாஞ்சேனை புளூமெண்டல் தொடர்மாடி குடியிருப்பில் தீ பரவல்!

கொழும்பு - கொட்டாஞ்சேனை, புளூமெண்டல் தொடர்மாடி குடியிருப்பில் தீ பரவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக கொழும்பு தீயணைப்பு பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நடவடிக்கையில் கொழும்பு மாநகர சபையின் 5 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபட்டு கட்டுக்குள் கொண்டுவந்தன.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ரஞ்சன் ராமநாயக்க வைத்தியசாலையில்!



சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சனுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் சிசிர டீ ஆப்றூ தலைமையிலான நீதியரசர்களான விஜித் மலல்கொட, ப்ரீதித் பத்மன் சூரசேன ஆகியோரை உள்ளடக்கிய மூவர் கொண்ட நீதியரசர்கள் குழாமினால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில் திடீரென ஏற்பட்ட உடல்நல குறைவு காரணமாக அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# உக்ரைன் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யாவில் மக்கள் போராட்டம்; 936 பேர் கைது

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதற்கு சொந்த நாட்டிலேயே எதிர்ப்பு வலுத்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். உக்ரைன் மீது கடந்த 24 ஆம் திகதி ரஷ்யா தாக்கு தலை தொடங்கியது. கிரிமியாவை தன்னுடன் இணைக்க ரஷ்யா தாக்குதல் நடத்தியதுபோல், இதுவும் எளிதாக முடியவடையும் என ரஷ்யா மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், தாக்குதல் நீண்டு கொண்டே செல்கிறது.

ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் கடுமை யாக தடைகளை விதித்துள்ளமையால், ரஷ்யாவில் அத்தியாவசிய பொருள்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இதனிடையே உக்ரைன் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யாவில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார் அவர்களை கைது செய்து போராட்டத்தை ஒடுக்கி வருகின்றனர். இன்று போராட்டத்தில் ஈடுபட்ட 936 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த மாதம் 24 ஆம் திகதியில் இருந்து தற்போது வரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யாவுக்கு எதிராக கண்டனம் தெரிவிக்க சீனா மறுப்பு




ரஷ்யாவுடன் சீனா நல்ல நட்புறவை விரும்புவதாக அமெரிக்காவிற்கான சீனதூதர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவிற்கு சீனா பொருள் உதவி வழங்கினால், அந்நாடு கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று கடந்த வாரம் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் எச்சரித்திருந்தார்.

ரஷ்யாவிற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மேற்கத்திய நாடுகள் மற்றும் ஜப்பானுடன், சீனாவும் இணைந்து கொள்ள வேண்டும் என்று உக்ரைனும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்துள்ள அந்நாட்டிற்கான சீன தூதர் கிங் ஆங், ரஷ்யாவிற்கு எதிராக சீனா தெரிவிக்கும் கண்டனம் போரை தடுக்க உதவாது என தெரிவித்தார். பேச்சு மற்றும் தூதர ரீதியில் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று மட்டுமே சீனா வலியுறுத்தும் என அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவுடன் அண்டை நாடு என்ற முறையிலும் நட்பு ரீதியிலும் உறவுகளை சீனா விரும்புவதாகவும், ரஷ்யாவுடன் வர்த்தகம், பொருளாதாரம், நிதி, எரிசக்தி துறைகளில் சீனாவின் ஒத்துழைப்பு தொடரும் என்றும் அவர் கூறியுள்ளார்.



## மரியுபோல் நகர் சுற்றிவளைக்கப்பட்டது உக்ரைன் இராணுவம் சரணடையாதாம்

துறைமுக நகரான மரியுபோல் நகரை சுற்றி வளைத்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், சரணடைய வேண்டும் என்ற எச்சரிக்கையை உக்ரைன் நிராகரித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா 26ஆவது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த சில நாள்களாக துறைமுக நகரான மரியுபோலை சுற்றிவளைத்து கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி வருகிறது. சூப்பர்சோனிக் ஏவுகணை உள்ளிட்ட பயங்கரமான ஆயுதங்களுடன் தாக்குவதால் அந்நகரம் சீர்குலைந்துள்ளது. பொதுமக்கள் இறந்த வண்ணம் உள்ளனர். அங்கிருந்து வெளியேற முடியாமல் திணறி வருகின்றனர்.

இந்த நிலையில்தான் உக்ரைன் ராணுவ வீரர்கள் மரியுபோல் நகரில் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு, சரணடைய வேண்டும். இல்லையெனில் பேரழிவை சந்திக்க நேரிடும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

ஆனால், சரணடைய மாட்டோம் என உக்ரைன் துணை பிரதமர் இரினா வெரேஷ்சக் தெரிவித்துள்ளார். தொடர் சண்டையால் பொதுமக்கள் அத்தியாவசிய பொருள்கள் கிடைக்காமல் அவதிப்படும் நிலைக்குதள்ளப்பட்டுள்ளனர். ஆயுதங்களை கீழே போடுவது குறித்து எந்த பேச்சும் நடைபெறவில்லை. இதுகுறித்து ஏற்கனவே, நாங்கள் ரஷ்யாவுக்கு தகவல் தெரிவித்துள்ளோம் என இரினா தெரிவித்துள்ளார்.

## உக்ரைன்– ரஷ்யா போருக்கிடையே போலந்து செல்கிறார் ஜோ பைடன்



ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்ய இருக்கும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், உக்ரைன் எல்லை நாடான போலந்து செல்கிறார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த சில தினங்களாக ஹைப்பர்சோனிக் உள்ளிட்ட பயங்கரமான ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. குறிப்பாக மரியுபோல் நகரை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

நேட்டோ நாடு தலைவர்கள், ஜி7 மற்றும் ஐரோப்பிய யூனியன் தலைவர்களை சந்திப்பதற்காக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அடுத்த வாரம் பெல்ஜியம் செல்கிறார். இந்த சுற்றுப் பயணத்தின்போது வருகிற வெள்ளிக்கிழமை நேட்டோ நாடான போலந்துக்கு செல்வார் என வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

போலந்து உக்ரைன் நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள நாடாகும். உக்ரைனில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் போலந்திற்கு அகதிகளாக வந்தடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போலந்து செல்லும் ஜோ பைடன் அந்நாட்டு அதிபர் ஆண்ட்ரிசெஜ் டுடாவை சந்தித்து பேசுகிறார். போலந்து பயணத்தின்போது உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதால் மனிதாபிமானம் மற்றும் மனித உரிமைகள் நெருக்கடி குறித்த சர்வதேச நாடுகள் பதில் அளிப்பது எ குறித்து விவாதிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இம்ரான்கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை விவாதத்துக்கு



இம்ரான்கானை பிரதமர் பதவியில் இருந்து நீக்க அந்நாட்டு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு 172 வாக்குகள் தேவைப்படுகின்றன.

பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ள நிலையில், விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி பிரதமர் இம்ரான்கானை கடுமையாக விமர்சித்து வரும் அந்நாட்டு எதிர்க்கட்சி எம்.பிக்கள் 100 பேர், கடந்த 8 ஆம் திகதி பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் அவர் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை அளித்துள்ளனர்.

மேலும் 14 நாள்களுக்குள் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும் என்றும், சரியான நேரத்தில் நாடாளுமன்றத்தை கூட்டா விட்டால் முற்றுகைப் போராட்டம் நடத்துவோம் என்றும் எதிர்க்கட்சிகள் மிரட்டியுள்ளன.

இம்ரான்கானின் சொந்த கட்சியான பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியைச் சேர்ந்த 24 எம்.பிக்களும் அவருக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளனர். இதனால் கிரிக்கெட் வீரராக இருந்து அரசியல்வாதியாக மாறிய இம்ரான்கானுக்கு அரசியல் நெருக்கடி முற்றியுள்ளது. இந்நிலையில் பாக். நாடாளுமன்ற சபாநாயகர் அசாத் கைசர் வெளியிட்ட அறிவிப்பில், வரும் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு பாகிஸ்தான் நாடாளுமன்றம் கூடும் என்றும், அப்போது கீழ் சபையில் நம்பிக்கை இல்லா பிரேரணை மீது விவாதம் நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை முறைப்படி நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதும், அதன் மீதான வாக்கெடுப்பு மூன்று முதல் ஏழு நாள்களுக்குள் நடத்தப்பட வேண்டும் என்பதால் வருகிற 28ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்ரான்கானை பிரதமர் பதவியில் இருந்து நீக்க அந்நாட்டு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு 172 வாக்குகள் தேவைப்படுகின்றன.

தற்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆதரவுடன் 160 எம்.பிக்கள் ஆதரவு எதிர்க்கட்சிகளுக்கு இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் கூடுதல் எம்.பிக்களை இழுக்க குதிரை பேரத்தில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன என இம்ரான்கான் அரசு குற்றம் சாட்டியுள்ளது.

# மேகதாதுக்கு எதிராக தமிழக சட்டசபையில் தனியான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான டெல்டா மாவட்ட பாசன பகுதிகள் முழுக்க முழுக்க காவிரி நீரை நம்பியே உள்ள நிலையில், காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரை கர்நாடக அரசு தராமல் தடுத்து வருவதாக தமிழக ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டிவருகின்றனர்.

காவிரி நடுவர் மன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும் காவிரி தண்ணீருக்காக கர்நாடகாவை எதிர்பார்க்க வேண்டிய நிலையில்தான் தமிழக விவசாயிகள் உள்ளனர். இந்த நிலையில் காவிரி ஆற்றின் குறுக்கே தமிழக எல்லை அருகே மேகதாது என்ற இடத்தில் மிகப் பிரமாண்டமான அணையை கட்ட கர்நாடக அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.



தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்த போதிலும் அணை கட்டும் பணியை கர்நாடக அரசு தொடங்கி உள்ளது. இதற்காக 1,000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு மற்றும் காவிரி நடுவர் மன்றத்தின் அறிவுறுத்தல்களை மீறி கர்நாடக அரசின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. மேகதாது அணை கட்டுவதை தடுத்து நிறுத்தும் வகையில் தமிழக சட்டசபையில் இன்று தனித்தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதற்காக தமிழக சட்டசபையில் மேகதாது அணைக்கு எதிரான தீர்மானத்தை நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் முன்மொழிந்தார்.

காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் இசைவை பெறாமலும், ஒன்றிய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகதாதுவில் அணைகட்ட நிதி ஒதுக்குவதை எவ் வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால் கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் கண்டனத்தை இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.

கர்நாடகாவின் மேகதாது அணை திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச் சூழல் உள்பட எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசை இம்மாமன்றம் வலியுறுத்துகிறது.

காவிரி நதிநீர் பிரச்சினை ஒரு நீண்ட கால பிரச்சினையாகும். இதற்கு தீர்வாக உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று வழங்கிய தீர்ப்பு செயலாக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினை இரு மாநிலங்களின் உணர்வு பூர்வமான பிரச்சினை ஆகும். ஆதலால் மேகதாதுவிலோ அல்லது காவிரி படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தை, மற்றப் படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், ஒன்றிய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசினை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசை இம்மாமன்றம் கேட்டுக் கொள்கிறது.

உச்சநீதிமன்றத்தின் 18.5.2018 ஆணையின்படி, அதன் 16.2.2018 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பினை செயல்படுத்த, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே உச்சநீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்படாத, அணையை மேகதாதுவில் கட்ட கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதற்கு அனுமதி அளிக்கவோ கூடாது என்று ஆணையத்தை இம்மாமன்றம் கேட்டுக் கொள்கிறது.

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக் கொள்கிறது., என்று அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தை ஆதரித்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்பட அனைத்து கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் உரையாற்றினர். இறுதியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது உரையை நிகழ்த்திய பின்னர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதனை சபாநாயகர் அப்பாவு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

## ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தில் பன்னீர்செல்வம், இளவரசி வாக்குமூலம்



ஜெயலலிதா மரணம் தொடர்பான ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் இன்று ஆஜராகி வாக்குமூலம் அளித்தார். அப்போது அவர், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உடல்நிலை சரியில்லாமல் அப்பல்லோ மருத்துவமனையில் சேர்த்த விவரத்தை நான் சொந்த ஊரில் இருந்த போது தெரிந்து கொண்டேன். அவருக்கு சர்க்கரை வியாதி உள்ளமையை தவிர வேறு என்ன உடல் உபாதைகள் உள்ளன என்று எனக்கு தெரியாது. அவருக்கு என்ன சிகிச்சை வழங்கப்பட்டது, எந்த மருத் துவர் சிகிச்சை அளித்தார் என் றும் எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை விவரங்களை தலைமை செயலாளரிடம்தான் கேட்டு தெரிந்து கொள்வேன்.

சிகிச்சை பெற்ற போது ஒரு முறை கூட ஜெயலலிதாவை நான் நேரில் பார்த்ததில்லை. கடைசியாக மெட்ரோ ரயில் திறப்பு விழாவில்தான் கடைசியாக பார்த்தேன். அதன்பின் அவரை பார்க்கவில்லை, என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தில் சசிகலாவின் அண்ணன் மனைவி இளவரசியும் இன்று ஆஜரானார். அப்போது அவர் கொடுத்த வாக்குமூலத்தில், அப்பலோ மருத்துவமனையில் ஜெயலலிதா சிகிச்சை பெற்றபோது 75 நாள்களும் நான் மருத்துவமனைக்கு சென்றேன். அதில் ஓரிரு முறை மட்டுமே கண்ணாடி வழியாக ஜெயலலிதாவை பார்த்தேன். சசிகலாதான் உடன் இருந்து கவனித்துக்கொண்டார், என்றார்.

## நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் கூட்டுறவு அமைச்சர் பெரியசாமி தகவல்



தமிழக சட்டசபையில் பொது, வேளாண் பட்ஜட் மீதான விவாதத்தில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தியின் கேள்விக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பதிலளித்து பேசியபோது, வருகிற 31 ஆம் திகதிக்குள் நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை, ஆரணி, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த ஆட்சிக் காலத்தில் நகைக் கடன் மோசடி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கூட்டுறவு வங்கியிலும் 2 கோடியே 39 லட்சம் மதிப்பிலான போலி நகைகளை வைத்து மோசடி செய்துள்ளனர்.

சில இடங்களில் ஏட்டிலே கடன் எழுதி வைக்கப்பட்டு பல்வேறு முறைகேடுகள் நட ந்துள்ளன. இதுகுறித்து தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இதற்காக தணிக்கை குழு ஆய்வு செய்து தற்போது கடந்த சனிக்கிழமை அன்று 325 கோடி ரூபா 95 ஆயிரம் பேருக்கு நகை கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்கடன் வைத்து இருப்பவர்கள், கூட்டுறவு வங்கி ஊழியர்கள், அரசு ஊழியர்கள், அரசு சார்ந்த ஊழியர்களுக்கு இந்த நகை கடன் தள்ளுபடி அனுமதி இல்லை. அந்த அடிப்படையில் வருகிற 10 நாள்களுக்குள் 14 லட்சத்து 60 ஆயிரம் பேரின் நகைகடன் தள்ளுபடி செய்யப்படும், என்றும் அமைச்சர் பெரியசாமி தெரிவித்திருக்கிறார்.

## மஞ்சள் பை திட்டத்தை வலியுறுத்தி மதுரையில் நூதன விழிப்புணர்வு

மதுரையில் தமிழக அரசின் மஞ்சள் பை இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து மஞ்சள் பை மனிதன் வேடமிட்ட இளைஞர் நூதன விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.




பிளாஸ்டிக் பயன்பாட்டால் கடல் வாழ் உயிரினங்கள், உள்பட சுற்றுச் சூழலுக்கும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. பிளாஸ்டிக் பையின் தீமைகளை கருத்தில் கொண்டு ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் 14 வகை பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதித்து கடுமையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. ஆனாலும் பல கடைகளில் இன்னும் பிளாஸ்டிக் பைகளை வியாபாரிகள் மற்றும் கத்தில் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுக்க மீண்டும் மஞ்சப்பை திட்டத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி தொடங்கி வைத்தார். இதையடுத்து தமிழக முதல்வரின் மஞ்சள் பை திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் முதல்வரின் நடவடிக்கைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், மக்கள் மீண்டும் மஞ்சள் பையை பயன்படுத்த வலியுறுத்தியும் வைகை நதி மக்கள் இயக்கம் சார்பாக விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. இதில், பிரமாண்ட மஞ்சள் பையை உடலில் மாட்டிக் கொண்டு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நூதன விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டார்கள், அப்போது பிளாஸ்டிக்கின் தீமைகளை கருதி பிளாஸ்டிக்கை ஒழிக்க மத்திய - மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது, அரசுகளின் முயற்சிக்கு ஒத்துழைப்பு அளிக்கும் விதமாக மக்கள் மஞ்சள் பைகளை பயன்படுத்த வேண்டும் என இவ்வியக்கத்தின் சார்பில் கேட்டுக்கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்தமைக்கான சாபத்தையே ஆட்சியாளர்கள் அனுபவிக்கிறார்கள்

## சம்மாந்துறையில் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் விளக்கம்

(நூருல் ஹுதா உமர்)

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கதறக் கதற எரித்த சாபத்தையே இந்த ஆட்சி-யாளர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியால் நாட்டு மக்களை படுபாதாளத்துக்குள் அரசாங்கம் தள்ளியுள்ளது.

நாட்டு மக்களின் சாபத்தைப் பெற்ற அரசாங்கமாக இது இருக்கிறது. வீட்டுக்குப் போங்கள் என்று சொல்லுமளவுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் மாறியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை இளைஞர் காங்கிரஸின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற இளைஞர் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சமயமே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய ஆட்சியாளர்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று பிச்சை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் இந்தியா 100 கோடி டொலர்களை வழங்கியுள்ளது. இது இன்னும் இரண்டு மாதத்திற்குள் முடிந்துவிடும். அதற்கு பிறகு எந்த நாட்டில் போய்வாங்குவது? மீண்டும் இவ்வாறான நெருக்கடி ஏற்படும்.

இப்படியான நிலைமை கடந்த காலங்களில் கிரேக்கத்திலும், லெபனான் போன்ற நாடுகளில் ஏற்பட்டிருந்தன.

அந்த நாடுகளில் அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சியை அமைத்தாலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தன. அவ்வாறான நிலைமைதான் எமது நாட்டுக்கும் ஏற்படப் போகின்றது.- எனவும் அவர் தெரிவித்தார்.









# தியாகத்தாய் அன்னை பூபதியின் நினைவேந்தல் மாதம் ஆரம்பம்

ஈழத்தில் இந்தியப் படைகளின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதியின் 34 ஆவது வருட நினைவேந்தல் மட்டக்களப்பில் அமைந்துள்ள அன்னை பூபதியின் நினைவிடத்தில் நடைபெற்றது.

இந்நினைவேந்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

ஈழத்தில் அமைதிப்படை என்ற போர்வையில் ஆக்கிரமிப்புப் படைகளாகச் செயற்பட்ட இந்தியப் படைகளுக்கு எதிராக - தமிழ் மக்கள் மீதான அதர்ம யுத்தத்தை நிறுத்துமாறு கோரி - 19.03.1988 அன்று மட்டக்களப்பில் உண்ணா விரதத்தை ஆரம்பித்த அன்னை பூபதி அவர்கள் 19.04.1988 அன்று காலை 7.00 மணியளவில் தனது உயிரை தமிழ் மக்களுக்காக தியாகம் செய்தார்.

# யானை தாக்கியதில் காயமுற்றவர் சிகிச்சை பலனின்றி மரணமானார்

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாந்தாமலைப் பிரதேசத்தில் யானை தாக்கியதில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த 54 வயதுடைய சின்னத்தம்பி சரவணப்போடி என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நபர் கடந்த 16 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து அருகில் உள்ள குளத்திற்கு மீன் பிடிப்பதற்காக காலை வேளையில் சென்று கொண்டிருக்கும் போது வீதியோரத்தில் மறைந்திருந்த யானை தாக்கியதில் படுகாயமடைந்தார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவர் ஏழு வருடங்களுக்கு முன்னர் சட்ட விரோதமான முறையில் மின்சார வேலி ஒன்றை அமைத்து காட்டு யானை ஒன்றை உயிரிழக்கச் செய்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு பதில் நீதிவான் வி.வினோவா இந்திரன் அவர்களின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸார் மற்றும் சட்டவைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருதில் சிறப்புற நடந்த இலவச மருத்துவ முகாம் சேவை



நூருல் ஹுதா உமர்

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம் கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது மல்ஹறு ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தவிசாளர் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் றிசான் ஜெமீலின் ஆலோசனைக்கு அமைவாக வளமான தேசத்திற்கு ஆரோக்கியமான சமூகம் எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த இலவச மருத்துவ முகாமின் போது சாய்ந்தமருது மல்ஹறு ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும் உடற் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை போன்ற மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எம்.ஜே.இஸட்.எம்.ஜமால்டீன், திட்டப் பணிப்பாளர் டாக்டர் எம்.ஏ.எம்.முனீர், 'பெஸ்ட் ஒவ் யங்' அரச சார்பற்ற நிறுவனத்தின் செயலாளர் ஏ புஹாது, டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எஸ்.எம். நஜீம்டீன், உதவி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.இஸட். எஸ்.றியாஸ், நலன்புரி முகாமையாளர் எஸ்.எம்.அஜ்வத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சம்மாந்துறை பத்ரகாளியம்மன் ஆலய எண்ணெய்க்காப்பு வைபவம் நாளை



(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சம்மாந்துறை தமிழ்க்குறிச்சி ஸ்ரீ பத்ரகாளிஅம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெரும்சாந்தி பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இம் மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெரும்சாந்திப் பெருவிழா இன்று திங்கட்கிழமை வாஸ்துசாந்தி கணபதிஹோமம் உள்ளிட்ட கிரியைகளுடன் ஆரம்பமாகியது.

கும்பாபிசேக பிரதமகுரு சிவாச்சர்யதிலகம் சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிசேக கிரியைகள் யாவும் நடைபெற்றுவருகின்றன.

எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நாளை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்று தொடர்ந்து அடுத்த நாள் 23ஆம் திகதி புதன்கிழமை 9.51 மணி தொடக்கம் 11.03 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் மஹாகும்பாபிசேகம் நடைபெறவிருக்கிறது.



# வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்து!

## இளைஞன் படுகாயம்

யாழில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோட்டார் சைக்கிள் கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் கூடத்து மனோன்மணி அம்மன் ஆலயத்திற்கும் ஏழாம் கட்டை பகுதிக்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வட்டுக் கோட்டையைச் சேர்ந்த 24 வயதான இளைஞர் ஒருவரே படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த நபர் அவசர அம்புலன்ஸ் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு படுகாயமடைந்தவர் தலைக்கவசம் அணியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மேல் மாகாணப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடத்த முடிவு

தாள் தட்டுப்பாடு காரணமாக ஒத்திவைக்கப்பட விருந்த மேல் மாகாண பாடசாலைகளில் தரம் 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான தவணைப் பரீட்சைகளை மீண்டும் நடத்துவதற்கு மாகாண கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வினாத்தாள்களை அச்சிடுவதற்குத் தேவையான தாள்களை தற்போது பெற்றுக்கொள்ள முடியும் என மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ லால் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி மேல் மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தரம் 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களின் தவணைப் பரீட்சைகள் திட்டமிட்ட அட்டவணையின்படி மார்ச் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

மேலும், தரம் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தவணைப் பரீட்சைகள் இன்று (திங்கட்கிழமை) முதல் வழமை போன்று நடைபெறும் என கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ லால் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

# தற்போதைய பிரச்சினைகளை அரசியல் மயமாக்கக் கூடாது

## ஐ.தே.க. வலியுறுத்து



நாட்டின் தற்போதைய பிரச்சினைகளை அரசியல் மயமாக்கும் செயற்பாடுகளை நிராகரிப்பதாகவும் இதனால் பொதுமக்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்காது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்வது உள்ளிட்ட விரிவான வேலைத் திட்டத்தின் மூலமே தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகளும் இணக்கப்பாட்டுடன் செயற்படும் பட்சத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறையும் என அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழலில் அரசியலில் ஈடுபடும் தரப்பினர் மக்களின் சுமையைக் குறைக்க விரும்புவதில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரால் நிதி நெருக்கடியை தீர்த்து, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# குடிதண்ணீர் போத்தலின் விலையும் எகிறியது

நாட்டில் நாளுக்கு நாள் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பொருள்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன. டொலர் பற்றாக்குறை மற்றும் அமெரிக்க டொலருக்கு நிகராக ரூபா மதிப்பிழந்துள்ளமை இதற்குக் காரணமாகும்.

ரூபா மதிப்பிழந்துள்ளமை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருள்களின் விலைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும். எனினும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலைகளும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளைப் போன்று வேகமாக அதிகரித்து வருவது சிக்கலுக்குரியது.

இந்த நிலையில், தற்போது சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வரும் குடி தண்ணீர் போத்தலின் விலையும் அதிகரித்துள்ளது. 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 1.5 லீற்றர் குடிதண்ணீர் போத்தல் ஒன்றின் விலை 120 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பு 33 வீதமான விலை அதிகரிப்பாகும். தேவைக்கு அதிகமாக தண்ணீர் இருக்கும் நாட்டில் குடிதண்ணீர் போத்தலின் விலையில் டொலர் நெருக்கடி எப்படி பாதிப்பை ஏற்படுத்தும் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதேவேளை இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு இணையாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால் மாவின் விலையும் அதிகரித்துள்ளது. கொவிட் தொற்று நோய் காரணமாக மக்கள் பயன்படுத்தி வரும் முகக்கவசத்தின் விலையையும் 33 வீதத்தால் அதிகரிக்க உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

# வெற்றிலையின் விலையும் 10 ரூபாவாக எகிறியது!



வரலாற்றில் இல்லாத வகையில் வெற்றிலையின் விலை 10 ரூபாவாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

குலயாபிட்டிய, பகமுன, நாவுல போன்ற பகுதிகளில் வெற்றிலை வியாபாரம் பிரதானமாக இடம்பெற்று வரும் நிலையில், விவசாயிகளிடம் இருந்து கொத்தாக 850 ரூபாவுக்கு வெற்றிலையைப் பெற்று சில்லறை விற்பனை நிலையத்தில் ஒரு இலை 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் வெற்றிலையின் விலை ரூ.2.50 முதல் ரூ.5.00 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது வெற்றிலையின் விலை திடீரென 10 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் உரம் மற்றும் விவசாய இரசாயன தட்டுப்பாடு காரணமாக வெற்றிலைச் செய்கையின் வளர்ச்சியின்மை, எரிபொருள் விலை அதிகரிப்பு என்பனவே விலை அதிகரிப்பிற்கான பிரதான காரணம் என்றும் வியாபாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் திகதி முதல் பால்மா சந்தைக்கு!

தமது தயாரிப்புக்களின் விலைகள் அதிகரிக்கப்பட மாட்டா என்று மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

வேறு எந்த நிறுவனமும் பால்மா விலையை அதிகரிக்குமாயின் அது தொடர்பில் தமது நிறுவனம் கவனத்திற்கொள்ளாது என்று இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமது நிறுவனம் மீண்டும் பால்மா உற்பத்தி நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இவை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

இதேவேளை, பால்மா விலை அதிகரிக்கப்பட்டால் பெரும் அனர்த்தத்தை எதிர்நோக்க வேண்டியிருக்குமென பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாவனையாளர்கள் கூடுதல் விலைக்கு பால்மாவை கொள்வனவு செய்ய மாட்டார்கள் என்று நம்பப்படுகிறது.

பால்மா ஒரு கிலோ சுமார் 2 ஆயிரம் ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. 400 கிராம் பைக்கெட்டின் விலை 800 ரூபாவாகும். இவ்வாறான நிலையில் தமது நிறுவனங்களை நடத்துவதில் சிக்கலை எதிர்கொண்டிருக்கிறோம் என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கோடியக்கரையில் கரை ஒதுங்கியது இலங்கையின் ஆளில்லா மர்ம படகு!






நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை மீன்பிடித் துறை முகத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் காத்தான் ஓடை என்ற கடற்கரை பகுதியில் இலங்கையைச் சேர்ந்த கண்ணாடி இழை படகு ஒன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கரை ஒதுங்கியுள்ளது.

அப்பகுதி கடற்தொழிலாளர்கள் வழங்கிய தகவல்களுக்கு அமைவாக கோடியக்கரை சுங்கத்துறை கண்காணிப்பாளர் ஸ்டெல்லா மேரியின் உத்தரவின் பேரில் சுங்கத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று அப்படகை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டுள்ளனர். படகு கடற்தொழிலுக்கா அல்லது கடத்தலுக்கா பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பிலும், இந்தப் படகில் யாராவது வந்தார்களா? என்பது தொடர்பாகவும் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் கியூ பிரிவு பொலிஸ் மற்றும் கடலோர பாதுகாப்பு குழுமத்தினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2022இல் வெளியிடப்பெற்றது.